**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**வத்திராயிருப்பு**

**அசல் வழக்கு எண். 4 /2024**

**வா.சா. 1 மலைச்சாமி, S/o ராமர்**

**நாள்: 01.04.2026**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>1, 2 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் எதற்காக நீதிமன்றத்தில் குறியீடு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வா.சா.ஆ.1 ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணமானது 18.01.2008 அன்று எழுதப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்ட முத்திரைத்தாளானது கடந்த 15.12.2007 அன்று விற்பனை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

2) வா.சா.ஆ.1 ஆவண முத்திரைத்தாள் யாரால் வாங்கப்பட்டது என்றால் சின்னச்சாமி என்பவரால் வாங்கப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1வது நபர் பெயர் சின்னச்சாமி என்றும் 2வது நபர் பெயர் பிச்சை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதிக் கொடுப்பவர் கையெழுத்து செய்ய வேண்டிய

இடத்தில் K. பிச்சத்துரை என்று கையெழுத்து செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் கையால் எழுதப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். ஆவணம் கையால் எழுதப்பட்டதற்காக தனி காரணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

3) வா.சா.ஆ.1 ஆவணம் எதற்காக தட்டச்சு செய்யப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதிக் கொடுத்தவர் பெயர் பிச்சை என்றும் ஆனால் எழுதிக் கொடுப்பவர் கையெழுத்து செய்யும்பொழுது பிச்சை துரை என்று முரண்பட்டு காணப்படுகிறது என்றும் சொத்தின் உரிமையாளர் பெயர் என்ன என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் சாட்சியாக கையெழுத்து எதுவும் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட அன்றைய தினமே முழு கிரைய தொகையும் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரையத் தொகையானது ஏற்கனவே கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரிதான்.

4) எனது சகோதரர் தாக்கல் செய்த வழக்குரையிலும் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கு சொத்தின் அனுபவத்தினை என்னிடம் ஒப்படைத்ததாக சொல்லியுள்ள நிலையில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் சொல்வது போல எந்த வாசகங்களும் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2வது நபர் கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்க தவறும் பட்சத்தில் 1வது நபர் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு சொல்லப்பட்டுள்ளது என்றும் அதன் பெயரில் நான் சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தேனா

என்றால் இல்லை. ஆவணம் எழுதப்பட்ட நாளிலிருந்து ஆவணத்தை பதிவு செய்வதற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அல்லது நீதிமன்ற நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்று சொன்னால் ஆவணத்தை எழுதிக் கொடுத்தவர் பதிவு செய்து கொடுக்க மறுக்காத காரணத்தினால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என்னுடைய சகோதரர் வத்திராயிருப்பில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வந்தார் என்றால் 3 வருடங்களாக குடியிருந்து வந்தார்.

5) வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதும் பொழுது எனது சகோதரர் வத்திராயிருப்பில் தான் குடியிருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல அவர் உசிலம்பட்டியில் குடியிருந்து வந்தார். இந்த ஆவணம் எங்கே வாங்கப்பட்டது என்றால் வத்திராயிருப்பில் தான் வாங்கப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யும் பொழுது என்னுடைய சகோதரர் வத்திராயிருப்பில் இருந்து வந்ததை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் வாதிகள் 2008 வருடம் முதல் இறக்கும் வரை வத்திராயிருப்பில் குடியிருக்கவில்லை என்றும் திருப்பூரில் குடியிருந்து வந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எத்தனை பக்கங்களைக் கொண்டது என்றால் 3 பக்கங்களைக் கொண்டது.

5) வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதிக் கொடுப்பவரின் கையெழுத்து ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டு காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பக்கத்தில் உள்ள கையெழுத்தும் 2 வது பக்கத்தில் உள்ள கையெழுத்தும் முரண்பட்டு காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மேற்படி கையெழுத்துக்களை ஆட்சேபனை செய்து எதிர் வழக்குரை தாக்கல்

செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள கையெழுத்து பிச்சைதுரை எந்த ஊரில் கையெழுத்து தான் என்பதை நிரூபணம் செய்ய Expert Opinion வேண்டி மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து பிச்சத்துரை என்பவரின் கையெழுத்து இல்லை என்றும் இந்த ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல.

6) இந்த வழக்கு எப்பொழுது நீதிமன்றத்தின் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வழக்கின் விவரங்கள் ஆரம்பம் முதலே எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 01.06.2025 அன்று பிரதிவாதிகள் என்னுடைய அனுபவத்தினை இடஞ்சல் செய்ததாக புதிய வழக்கு மூலத்தினை உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்திலும் மேற்படி விபரங்கள் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரர் தாக்கல் செய்த வழக்கில் கூடுதல் வழக்கு மூலத்தை உற்பத்தி செய்வதற்காக மோசடியாக கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் நான் வழக்கு மூலத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்குச் சொத்தை எந்த வருடம் கிரயம் பெற்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வழக்கு சொத்தை கிரையம் வாங்கிய விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

7) வழக்கு சொத்துக்கான சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் 3 செண்ட் மற்றும் சர்வே எண் 490 ஆகும். வழக்கு சொத்தின்

உண்மையான உரிமையாளரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க நானும் எனது சகோதரரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையான உரிமையாளரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தால் வ.சா.ஆ.1 ஆவணம் மோசடி ஆவணம் என்று தெரிந்துவிடும் என்கின்ற காரணத்தினால் தான் அவரை இந்த வழக்கில் கட்சி சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் ஏதேனும் விசாரணைகள் நடத்தப்பட்டு விசாரணை முடிவுகளை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தின் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எனதுமனைவியின் பெயரில் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்று சொன்னால் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை.

8) 2011 வது வருடத்தில் நான் பிச்சை என்பவரிடமிருந்து என்னுடைய மனைவி பெயரில் கிரையம் வாங்கியிருப்பேன் என்று சொன்னால் இருக்கலாம். வழக்கு சொத்து சம்பந்தமாக என்னுடைய சகோதரர் சிவகாசி சார் ஆட்சியர் அலுவலகத்தில் மனு செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது சகோதரர் கொடுத்ததாக சொல்ல கூடிய மனுவில் என்ன எழுந்திருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வடக்கு சத்தில் கட்டுமானம் இருப்பதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு அனுமதி மற்றும் வீட்டு வரி ரசீது ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள கட்டுமானமானது பிச்சத்துரை என்பவரின் இறப்புக்கு பின்னர் கட்டப்பட்ட கட்டுமானம் என்று சொன்னால் சரியல்ல. புகைப்படங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க

தேவையான 65B சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9) எனது சகோதரர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து நீதிமன்றத்தில் எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியில்ல. 2013 வது வருடத்திலிருந்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பெயர்கள் வருவாய் துறை ஆவணங்களில் கூட்டு உரிமையாளராக சேர்க்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் தெரியாது. வாதிகள் வழக்கு சத்தில் அனுபவத்தில் இல்லை என்றும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், சொத்தை அபகரிக்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபன வாக்குமூலம் போலியானது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு உரிமையும் இல்லை என்றும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் சொன்னால் சரியல்ல. அசல் உரிமையாளரை இந்த வழக்கில் தரப்பினராக நான் சேர்க்காத காரணத்தினால் அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

10) வழக்கு சொத்தில் உள்ள என்னுடைய உரிமையை விளம்புகை செய்ய பரிகாரம் கேட்காமல் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது நிலைக்குத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

(3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு